1989 மார்ச் 31]

3-ம் தேதியிலிருந்து 15 நாளைக்கு ஒரு முறை கோழிமுட்டை வழங்கப்படும். அதற்குப் பிறகு கோழிப்பண்ணை வைத்து வாரத்திற்கு ஒரு கோழிமுட்டை என்று வழங்கப்படும்.

(முற்பகல் 10-00)

10,000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைத்தல்

18.—(*வினா எண். 214) திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 10,000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு தலைவரவர்களே, கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. ஆனால் மருத்துவமனைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளன? எனவே கிராமங்களில் மருத்துவ மனைகள் அதிகரிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தில் மொத்தம் 152 லட்சம் கால் நடைகள் இருக்கின்றன. சுமார் 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கப்பட வேண்டுமென்று தேசீய வேளாண்மைக் குழு பரிந்துரை செய்துள்ளது. தற்சமயம் தமிழகத்தில் 806 கால்நடை மருந்தகங்கள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைப்பதுபற்றி 1990-ம் ஆண்டுக்குள்ளாக கால் நடை மருந்தகங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பது தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரை. தற்போதைய நிதிநிலை காரணமாக, தற்சமயம் அந்தப் பரிந்துரையை செயல்படுத்த இயலாத நிலையில் அரசு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு தலைவரவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் பணியாற்றும் துணை மருத்துவ நிலையங்களில் அனைத்து மருத்துவ வசதிகளும் செய்யும் வகையில் அந்த மருத்துவமனைகளை அரசு மாற்றி அமைக்குமா?

[1989 மார்ச் 31

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் முதலுதவிச் சிகிச்சை அளிப்பதற்காக கால்நடை கிளை நிலையங்களில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய பணி முதலுதவிச் சிகிச்சை அளிப்பதும், கிராமங்களுக்குச் சென்று கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய, அத்துறையினுடைய செயல்களையும், பணிகளையும் அவர்களுக்கு விளக்கிக் கூறுவது மட்டுமே, 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்பது அரசினுடைய கோள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. தற்போதைய நிதிநிலை காரணமாக, அவை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அரசினுடைய கொள்கை, 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தி தருவது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) எதிர்க்கட்சித் தலைவர்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவது பற்றி சென்னை நகரக் காவல்துறை ஆணையர் தெரிவித்துள்ள கருத்து

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்கு ஒரு தகவலைக் கொண்டுவந்து அவர்கள் மூலம் ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். சட்டமன்றத்திலே 29-ம் தேதி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசுகிறபோது, ''எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற செல்வி ஜெயலலிதா அவர்கள் மீது வழக்கு வந்திருக்கிறது என்று எனக்கு தெரிந்த உடனேயே நான் கமிஷனருக்கு தகவல்சொல்லிஅந்த வழக்குத் தொடரப்பட வேண்டாமென்று உத்திரவிட்டேன் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 29-ம்தேதி தெரிவித்த அந்தச் செய்தி, வழக்குகள் வாபஸ் என்ற தலைப்பிலே அடுத்த நாள் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. ஆனால் நேற்று 30-ம் தேதி போலீஸ் கமிஷனர் வெளியே பத்திரிக்கைகளுக்கு பேட்டி கொடுத்த செய்தி எல்லாப் பத்திரிக்கைகளிலும், ''அப்படி எந்த உத்திரவும் அரசிடமிருந்து எனக்கு வரவில்லை; போடப்பட்ட வழக்கு அப்படியே இருக்கிறது; விசாரணை நடக்கிறது'' என்று சொல்லி, கமிஷனர் சொன்ன பேட்டி நேற்றுப் பத்திரிக்கைகளிலே வந்திருக்கிறது. சட்டமன்ற மரபுகளின்படி கூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதற்கு முன்னாலே தான்சொன்ன